# தனியார் நிறுவன ஊழியருக்கு ஓய்வூதிய ஆணை!

## கிளை மேலாளர் வழங்கினார்!!

கோவை,ஜூன்.13–

கோவை இஎஸ்ஐ கார்ப்பரேஷன் துணை மண்டலத்திற்கு உட்பட்ட பெரியநாயக்கன்பாளையம் கிளை அலுவலகப் பகுதியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்த கோபிந்த சந்திரா நாயக் என்பவர் கடந்த வருடம்2023 செப்டம்பர் மாதம் பணியில் இருந்த போது ஏற்பட்ட விபத்தில் ஒரு விரலில் சிறிய சேதம் ஏற்பட்டது.

அதன்படி கோபிந்த சந்திரா நாயக் இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் கோவை துணை மண்டலக இணை இயக்குனர் (பொறுப்பு) ரவிக்குமார் ஆணையின்படி ஓய்வூதிய ஆணை வழங்கப்பட்டது.



இதனை பெரியநாயக்கன்பாளையம் கிளை மேலாளர் பிஎஸ் பிரேமானந்தன் வழங்கினார். இதன் மூலம் அவருக்கு மாதம் தோறும் 1158/ ரூபாய் 31 நாட்களுக்கு ஓய்வூதிய தொகையாக பெறுவார் மேலும் நிலுவைத் தொகையாக 8958/ ரூபாயும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் கிளை அலுவலகத்தை சார்ந்த ரங்கநாதன் சந்தோஷ் குமார் மற்றும் தனியார் நிறுவனத்தை சார்ந்த மனிதவள மேம்பாட்டு அலுவலர் மனோஜ் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.